**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.45/2025**

**Date : 31.12.2025**

**PW2 தீபலெட்சுமி**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அறநிலை துறையில் ஆய்வாளராக இரண்டு வருடங்களாக பணிசெய்து வருகிறேன். வட்டாச்சியர் அவர்களுக்கு அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அதிகாரம் இல்லை என்று உங்களுக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் போலீஸ் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் தேவேந்திரகுல சமுதாயத்தை சேர்ந்தவர்களிடம் பூஜை பொருள், தேங்காய் அனைத்தும் மாலை 4.00 மணிக்குதான் எடுத்துவந்தார்கள் என்று கூறியிருக்கிறீரா என்றால் சரிதான். மேற்படி சம்பவ சமயத்தில் நான் அங்கே இருந்தேனா என்றால் இருந்தேன். சம்பவ சமயத்தில் டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் மற்றும் மற்ற போலீஸ் அதிகாரிகள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

போலீஸ் விசாரணையில் எந்த எதிரிகள் எந்த கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தின்போது அந்த வளாகத்தில் எத்தனை பேர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 100 பேர் இருந்திருப்பார்கள். எதிரிகள் என்னை திட்டியதற்காக நான் தனிப்பட்ட முறையில் புகார் அளித்தேனா என்றால் அளிக்கவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மாலை 4.00 மணிக்கு பூஜை பொருட்களை எடுத்து வந்து மாலை 6.00 மணி வரை அங்கு மேற்படி பிரச்சனை நடந்தது என்றால் சரிதான்.

மேற்படி சம்பவம் நடந்த சமயத்தில் முழுவதும் நான் அங்கே இருந்தேன் என்றால் சரிதான். போலீஸார் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் என்னை இரண்டு மாதங்கள் கழித்துதான் விசாரணை செய்தார்கள். புகார்தாரர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.